செ.வெ.எண்:02/2017 நாள்:02.10.2017

**சிவகங்கை மாவட்டம்**
**இளையான்குடி வட்டம், திருவள்ளூரில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு சிறப்பு கிராமச் சபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ,ப.,அவர்கள் கலந்து கொண்டு பார்வையிட்டார்.**



சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், திருவள்ளூரில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு கிராம சபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு பார்வையிட்டார்.

இக்கூட்டத்தில் கிராம வளம் மற்றும் தூய்மைக்கான இருவார இயக்கத்தினை அக்டோபர் 1 முதல் 15 வரை சிறப்பிக்க கொண்டாடுவது குறித்து விவாதித்தல், குடிநீர் சிக்கனமாக பயன்படுத்துதல், பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல், கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம் - (VPDP), அந்தியோதயா இயக்கம், கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல், ஊராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்ட பணிகள் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விபரங்கள் குறித்து விவாதித்தல், ஆண்டறிக்கை மற்றும் வரவு செலவு, சுகாதாரம் (திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற ஊராட்சிகள்), மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டப் பணிகள் முன்னேற்றம், சமூக தணிக்கை, மகளிர் திட்டம் மற்றும் கழிப்பறை கட்டி பயன்படுத்தும் பயனாளிகளை பாராட்டுத் தெரிவித்தல், திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளுதல், தூய்மையே சேவை இயக்க உறுதிமொழி ஏற்றல் மற்றும் இதரப் பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.ரங்கசாமி, உதவி இயக்குநர் (தணிக்கை) திரு.கருப்பசாமி, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ரகுவீரகணபதி, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) திருமதி.அழகியமீனாள், அரசு அலுவலர்கள் மற்றும் கிராமப் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.